**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No.171/2018**

Deposition of **<u>D.W.3</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 17.10.2024 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : சஞ்சீவி | Father's Name | : வீரப்ப நாயக்கர் |
| Village | : உலிபுரம் | Taluk | : கெங்கவல்லி |
| Calling | : விவசாயம் | Age | : 69 |

துவக்க நேரம்: 03.50 P.M

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. வாதியும் பிரதிவாதியும் வாங்கியுள்ள கிரயப்பத்திரங்களில், வெங்கடாஜலத்தின் இதர நிலத்திற்கு கூட்டு கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துச் செல்லும் பாத்தியம் வழங்கப்பட்டுள்ளதாக நான் சொல்லியுள்ள நிலையில் அவ்வாறுதான் அந்த பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளது என்று படித்துப்பார்த்தேனா என்றால் படித்துப்பார்த்தேன்.

2. சர்வே எண். 206/4 சி-ல் உள்ள கிணற்றில் உள்ள மின் மோட்டாரில் வெங்கடாஜலத்திற்கு சமபாக உரிமை நான் சாட்சி சொல்லும் சமயத்தில் உள்ளதா என்றால் உள்ளது. வெங்கடாஜலத்தின் வேறு நிலங்களின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.207/5 பி ஆகும். மேற்படி 207/5 பி-ல் உள்ள கிணற்றில் இருந்து சர்வே எண். 206/4 பி-ல் உள்ள நிலத்திற்கு நீர் வருமா என்றால் வராது.

3. அந்த கூட்டுக்கிணற்று தண்ணீர் வெங்கடாஜலத்தின் மற்ற நிலங்களுக்கு

செல்வது தொடர்பாக நாங்கள் எத்தனை முறை பேசியிருப்போம் என்றால் 2 முறை பேசியிருப்போம். எப்பொழுதெல்லாம் பேசினோம் என்றால் கடந்த 2005-ஆம் ஆண்டு ஒருமுறையும், 2017-ல் ஒரு முறையும் பேசினோம், அதுவும் சரிவராமல் 2020-ல் ஒருமுறை பேசினோம்.

4. சர்வே எண். 206/4சி-ல் இருந்து வெங்கடாஜலத்தின் மற்ற நிலங்களுக்கு தண்ணீர் செல்வதாக நான் சொல்லும் நிலையில் பி.வி.சி பைப் மூலம் தண்ணீர் செல்கிறதா சிமெண்ட் பைப் மூலம் தண்ணீர் செல்கிறதா என்றால் சிமெண்ட் பைப் மூலம் தான் தண்ணீர் செல்கிறது.

5. எத்தனை பைப் லைன் போகிறது என்றால் ஒரு லைன் தான் போகிறது. இந்த பைப் லைன் வழியாக வெங்கடாஜலத்தின் நிலத்திற்கு தண்ணீர் எடுத்துச் செல்வது குறித்து பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா அல்லது முச்சலிக்காவில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் பத்திரத்தில் வெங்கடாஜலத்தின் மற்ற நிலங்களுக்கும் சிமெண்ட் பைப் வழியாக தண்ணீர் எடுத்துச் செல்லலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது, அந்த அடிப்படையில் தான் வெங்கடாஜலம் உரிமை கோருகிறார். அதனடிப்படையில் தான் நாங்கள் சமரசம் பேசினோம்.

6. நான் கூறும் முச்சலிக்காவில் உள்ள ஷரத்துக்களை ஒட்டி வவெங்கடாஜலம் பெருமாளுக்கு தொகை ஏதேனும் செலுத்தினாரா என்றால் செலுத்தவில்லை, வெங்கடாஜலத்திற்கு கிணற்றிலும், மின் மோட்டாரிலும் சம உரிமை உள்ளது அதனால் தொகை செலுத்தவில்லை.

7. பெருமாளின் நிலத்திற்கு அடியில் சிமெண்ட் பைப்பை வெங்கடாஜலம் நிலத்திற்கு கொண்டு போவதற்கு வெங்கடாஜலம் பெருமாளுக்கு ஏதேனும் தொகை செலுத்தினாரா என்றால் இவர்கள் இருவரும் கிரயம் பெறும்பொழுதே அந்த இடத்தில் தண்ணீர் எடுத்துச் செல்வதற்காக பைப் போடப்பட்டிருந்தது.

8. கடந்த 2005 முச்சலிக்காவில், கிரயம் பெற்ற சொத்தில் ஏற்கனவே பைப்

இருந்ததாக குறிப்பிட்டு எழுதியுள்ளோமா என்றால் எழுதியுள்ளோம். கடந்த 03.03.2020 தேதியிட்ட பத்திரம் குறித்து சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் ஆமாம். வாதியே அந்த பத்திரத்தை முன்னிலைப்படுத்தாத நிலையில் அது குறித்து என்னுடைய சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தரப்பினர்களுக்குள் எவ்வளவு ஆண்டுகாலமாக வழக்கு நடந்து வருகிறது என்றால் 2017 முதல் வழக்கு நடக்கிறது. நான் வெங்கடாஜலத்திற்கு ஒருதலைபட்சமாக நடந்து கொள்வதாலும் பெருமாள் நான் சொன்னதை ஏற்றுக் கொள்ளாததாலும் அவருக்கு எதிராக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதுமாக முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்: 04.16 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-S.Munusamy

Principal Distrit Munsif, Attur

Typed by Tmt. L.Kalaiselvi - O.S. No. 171/2018, Dt.17.10.2024.